


**10. 12. 2025**

## தலைப்புச் செய்திகள்

1. தீபாவளி பண்டிகை யுனஸ்கோவின் பாரம்பரிய கலாச்சார பட்டியலில் இணைக்கப்பட்டதால் நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதத்தில் மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா இன்றுமாலை மக்களவையில் பதில் அளிக்கிறார்.

3. நாட்டில் இன்னும் ஐந்தாண்டுகளில் 85 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் 100 மில்லியன் டன் நிலக்கரியை, வாயுவாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சதீஸ் சந்திர துபே கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் தஞ்சை, நாகை உள்ளிட்ட மாவட்டங்களில் 332 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெல் சேமிப்பு கிடங்குகளுக்கு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

5. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளை வரவேற்று அஇஅதிமுக-வின் பொதுக்குழு கூட்டத்தில் இன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## இனி விரிவான செய்திகள்

*************

**யுனஸ்கோ**

இந்தியாவின் இன்றியமையா ஆன்மீக கலாச்சார பண்டிகையான தீபாவளி யுனஸ்கோவின் பாரம்பரிய கலாச்சார பட்டியலில் இணைக்கப்பட்டதால் நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இந்திய கலாச்சாரத்துடன், ஆழமான தொடர்புடைய தீபாவளி பண்டிகை, தேச நாகரீகத்தின் ஆன்மாவாக திகழ்கிறது என்று பிரதமர் தமது சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தீபாவளி ஒளி மற்றும் பக்தி மார்கத்தின் அடையாளமாக திகழ்கிறது என்ற கூறிய பிரதமர் யுனஸ்கோவில் அது இணைக்கப்பட்டதால் அதற்கான அங்கீகாரமும், சிறப்பும் மேலும் அதிகரிக்கும் என்று குறிப்பிட்டார்..

மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கஜேந்திர சிங் ஷெகாவத் எடுத்துரைக்கையில், ஒவ்வொரு இந்தியருக்கும் இது உணர்வுபூர்வமான தருணம் என்று குறிப்பிட்டார்.

*************

**பிரதமர் -நிதி**

வங்கிகளில் உள்ள உரிமை கோராத நிதி சார்ந்த சொத்துக்களை புதுப்பிப்பதற்கான வாய்ப்பை உங்கள் பணம் உங்கள் உரிமை இயக்கம் வழங்குவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பான இணையதள பதிவை பகிர்ந்துள்ள பிரதமர், வங்கிகளில் நீண்ட காலமாக உரிமை கோரப்படாமல் இருக்கும் வைப்பு தொகை, காப்பீடு, உள்ளிட்ட நிதிகளை மக்கள் மீட்டுக்கொள்ள இந்த இயக்கம் வகை செய்வதாக குறிப்பிட்டார்.

*************

**குடியரசு தலைவர் – மனிதஉரிமை தினம்**

மனித உரிமைகள், சமத்துவ சமுதாயத்திற்கு வழிகோலுவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் சார்பிலான நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், மனிதர்களுக்கான மாண்பில் எவ்வித சமரசத்திற்கு, இடமில்லை என்றும், எவருக்கும் உரிமைகள் மறுக்கப்பட கூடாது என்றும் வலியுறுத்தினார்.

நீதித்துவம், சமத்துவம், பரிவுமிகு சமூகத்தின் அடையாளமாக மனித உரிமைகள் தினம் திகழ்வதாக எடுத்துரைத்தார்.

நீதி என்பது நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனின் பிறப்புரிமை என்றும், அவர் எடுத்துரைத்தார்.

மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் உலகளாவிய நாடுகளுக்கு இந்தியா முன்னோடியாக நம் தேசம் திகழ்கிறது என்றும் பெருமிதம் தெரிவித்தார்.

*************

**மக்களவை வேணுகோபால்**

மக்களவையில் தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதத்தில் இன்று உரையாற்றிய காங்கிரஸ் தலைவர் திரு.கே.சி.வேணுகோபால், அனைவரும் வாக்களிப்பதற்கான உரிமை ஜனநாயகத்தின் அடிப்படை கொள்கை என்று குறிப்பிட்டார்.

தேர்தல் ஆணையம் பாரபட்சமாக நடந்து கொள்வதாக அவர் குற்றம் சாட்டினார்.

**பிஜேபி மூத்த தலைவர் திரு.ரவிசங்கர்** பிரசாத் பேசுகையில் எதிர்கட்சிகள் தோல்வி அடையும் போதெல்லாம் தேர்தல் நடைமுறைகள் குறித்த கேள்வியை எழுப்புவதாக குறைகூறினார்.

**மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா** தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதத்தில் இன்று மாலை மக்களவையில் பதில் அளிக்கிறார்.

*************

**மக்களவை - அஷ்விணி வைஷ்ணவ்**

அம்ரித் பாரத் ரயில் திட்டத்தின் கீழ் நாட்டில் 160 ரயில் நிலைய மேம்பாட்டு பணிகள் முடிவடைந்திருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், இந்த திட்டத்தின் கீழ் ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் கண்டறியப்பட்டதாகவும், பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதில் அரசு முழுவீச்சில் செயலாற்றி வருவதாக கூறினார்.

பயணிகளின் பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமையுடன் ரயில் நிலையங்கள் மறு கட்டமைப்பு செய்யப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

*************

**மக்களவை - சதீஸ் சந்திர துபே**

நாட்டில் இன்னும் ஐந்தாண்டுகளில் 85 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் 100 மில்லியன் டன் நிலக்கரியை வாயுவாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிலக்கரி இணை அமைச்சர் திரு.சதீஸ் சந்திர துபே தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அவர், நம் நாட்டில் உள்ள அபரிமிதமான நிலக்கரி வளங்களை பயன்படுத்தி எரிசக்தியில் தன்னிறைவை பெற இந்நடவடிக்கை என்றார்.

இதன்மூலம் தூய்மையான எரிசக்திக்கு வழிகோலுவதோடு யூரியா உள்ளிட்ட ரசாயனம் விவசாயிகளுக்கு மலிவு விலையில் கிடைக்கும் என்றார்.

*************

**மக்களவை - ஜோதிர் ஆதித்ய சிந்தியா**

மக்களவையில் மற்றொரு கேள்விக்கு பதில் அளித்த மத்திய தொலை தொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா, கடந்த 11 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 170 அஞ்சல் நிலையங்கள்

அமைக்கப்பட்டு, தபால்தளம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

உலக அளவில் இந்தியாவின் அஞ்சல் கட்டமைப்பு பிரம்மாண்டமானது என்று கூறிய அவர், ஒரு லட்சத்து 64 ஆயிரம் அஞ்சல் நிலயங்கள் நம் நாட்டில் இயங்குவதாக குறிப்பிட்டார்.

2 லட்சத்து 78 ஆயிரத்திற்கும் அதிகமான கிராம சேவகர், இரவு பகலாக அஞ்சல் சேவைகளை முன்னெடுத்து செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

*************

**ராஜாஜி**

மூதறிஞர் ராஜாஜியின் 147 ஆவது பிறந்த நாளை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

ஜனநாயக விழுமியங்கள் மீது உறுதியான பற்று கொண்டிருந்த அன்னாரின் பிறந்த நாளில் அவருக்கு மரியாதை செலுத்துவதாக கூறியுள்ளார்.

**முதறிஞருக்கு அஞ்சலி செலுத்தியுள்ள பிரதமர்** திரு.நரேந்திரமோடி, சுதந்திரபோராட்ட வீரர், சிந்தனையாளர் அரசியல்வாதி என்ற பன்முகம் கொண்டவர் என பாராட்டியுள்ளார்.

**அன்னாரின் தியாகங்களையும் சமுதாய** பணிகளையும் போற்றி வணங்குவதாக மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

**தமிழக அரசின் சார்பில் மாநில அமைச்சர்** திரு.மு.பெ.சாமிநாதன் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அவரது திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

*************

**முதலமைச்சர்**

தஞ்சை, நாகை, மயிலாடுதுறை, கடலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 332 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்களுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், நீலகிரி மாவட்டம் பந்தலூர், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டங்களில் 14 கோடி ரூபாய் மதிப்பிலான 3 செயல்முறை கிடங்கு வளாகங்களையும் முதலமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு பணிநியமன ஆணைகளை அவர் வழங்கினார்.

செய்தி மக்கள் தொடர்பு துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பத்திரிக்கையாளர்களுக்கு, மாதந்தோறும் 12 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளையும், அளித்தார்..

*************

**எடப்பாடி**

அஇஅதிமுக-வின் பொதுக்குழு கூட்டம் கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை அஇஅதிமுக வரவேற்கின்றது,

கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும், உள்ளிட்ட 16 தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

*************

**வாக்காளர் பட்டியல்**

தமிழகத்தில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான, கணக்கீட்டு படிவங்களை சமர்ப்பிக்க நாளை கடைசி நாளாகும்.

விநியோகிக்கப்பட்ட படிவங்களில் இதுவரை 99.55 சதவிகித படிவங்கள் பதிவேற்றப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதனிடையே திருச்சி மாவட்டத்தில் வாக்காளர்கள் பூர்த்தி செய்த படிவங்களை காலம் தாழ்த்தாமல் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சரவணன் அறிவுறுத்தினார்..

**வாய்ஸ்**

*************

**சஞ்சய் குமார்**

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் சிறு குறு நடுத்தர தொழில்துறையினரின் பங்கு மற்றும் தர கட்டுப்பாடுகளின் முக்கியத்துவத்தை பாதுகாப்பு உற்பத்தி துறை செயலாளர் திரு.சஞ்சய் குமார் வலியுறுத்தியுள்ளார்.

கோவை நிலாம்பூரில் இன்று நடைபெற்ற பாதுகாப்பு தொழில்துறை மாநாட்டில் காணொலி வாயிலாக பங்கேற்ற அவர், தொழில் துறையினருடன் தர கட்டுப்பாடு குறித்த ஆலோசனைகள் பரிமாற்றங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் செய்தியாளர்களிடம் பேசிய இத்துறையின் இணை செயலர் கரிமா ஃபஹத், பாதுகாப்பு தளவாட உற்பத்தியை ஊக்குவிக்க முனைப்புடன் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்.

*************

**சக்கரபாணி**

கிருஷ்ணகிரி மாவட்டம் கண்ணம்பள்ளி கோவில் - மேலேரி கொட்டா வரையிலான 3 கிலோ மீட்டர் தார்சாலை

அமைக்கும் பணிகளுக்கு மாறில அமைச்சர் திரு.சக்கரபாணி இன்று அடிக்கல் நாட்டினார்.

மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் மூலதன முதலீட்டு சிறப்பு திட்டத்தின் கீழ், 2 கோடியே 66 லட்ச ரூபாய் மதிப்பில் இப்பணிகள் நடைபெறுகின்றன.

*************

**தொல்லியல் துறை**

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் மேற்கு தொடர்ச்சிமலை செண்பகதோப்பு பகுதியில் புதிய கற்கால நாகரீகம் நிலவியதற்கான தடயங்களை தொல்லியல் துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

தென்தமிழ்நாட்டில் புதிய கற்கால நாகரீகத்திற்கு இச்சான்றுகள் வலுவாக உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

*************

**கிறிஸ்துமஸ்**

கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி மதுரை மாவட்டம் விளாச்சேரியில் கிறிஸ்துமஸ் குடில் பொம்மைகள் தயாரிக்கும் பணி மும்முரமாக நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

இதேபோல் விழுப்புரம் மாவட்டத்தில் கிறிஸ்துமஸ் கேக் தயாரிக்கும் பணிகளை சமையல் கல்லூரி மாணாக்கர் தொடங்கியுள்ளது.

*************

**கிரிக்கெட்**

இந்திய – தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது 20-20 கிரிக்கெட் போட்டி சண்டிகரில் நாளை நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**